**செய்தி வெளியீடு எண்: 116** **நாள்: 19.02.2018**

## செய்தி வெளியீடு

# தமிழ் வளர்ச்சித் துறை

யுனஸ்கோ நிறுவனத்தால் **1999**–ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி **21**–ஆம் நாளை உலகத் தாய்மொழி நாள் என அறிவிக்கப்பட்டு, அதற்கிணங்க உலகெங்கிலும் தாய்மொழி நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில், உலகின் மூத்த மொழியாகிய நம் தமிழ்மொழியைப் போற்றிடும் வகையில் உலகத் தாய்மொழி நாளான பிப்ரவரி **21**–ஆம் நாளன்று, தமிழ் மொழியின் சிறப்பை இனிவரும் இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ள வேண்டும் எனும் உயரிய நோக்கில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் **2013–2014** ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின் போது **'உலகத் தாய்மொழி நாள்'** பிப்ரவரி **21**–ஆம் நாள் ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவில் கவியரங்கம், கருத்தரங்கம் நடத்திக் கொண்டாட அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்கிணங்க, ஒவ்வொரு ஆண்டும் உலகத் தாய்மொழி நாள் தமிழ் வளர்ச்சித் துறையில் கொண்டாடப்பட்டு வருகிறது. அதேபோன்று இவ்வாண்டும் உலகத் தாய்மொழிநாள் கருத்தரங்கம், **21.02.2018** அன்று முற்பகல் சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைந்துள்ள அண்ணா கருத்தரங்கக் கூடத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது. அன்றைய தினம் முற்பகல் **11.00** மணிக்கு **'அம்மாவும் அன்னைத் தமிழும்'** என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெறவுள்ளது. இக்கவியரங்கில் முனைவர் பால இரமணி அவர்கள் தலைமையேற்றும், கவிஞர் சி.கலைமகள், கவிஞர் பாரதி சுகுமாரன், கலைமாமணி அ. உசேன், கவிஞர் இதயகீதம் இராமானுஜம், புலவர் பிரதாபசிம்மன் (எ) பாக்கம் தமிழன், கவிஞர் துரை. இராசமாணிக்கம், கவிஞர் ஈ.விசய், கவிஞர் மு.முனீசுவரன், ஆகியோர் கவிதை வாசித்து சிறப்பிக்க உள்ளனர்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் **2.00**மணிக்கு **கருத்தரங்கம்** நடைபெறவுள்ளது. கவிஞர் வெண்ணிலா அவர்களின் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் **'இயல் தமிழ்'** என்ற தலைப்பில் புலவர் வெற்றியழகன் அவர்களும், **'இசைச்தமிழ்'** என்ற தலைப்பில் திருமதி செ.அ.பாகீரதி அவர்களும், **'நாடகத் தமிழ்'** என்ற தலைப்பில் முனைவர் இரா. குணசேகரன் அவர்களும், **'அயலகத் தமிழ்'** என்ற தலைப்பில் முனைவர் க.பசும்பொன் அவர்களும், **'அறிவியல்**

**தமிழ்'** என்ற தலைப்பில் திரு.கோ.மணி அவர்களும் '**கணினித் தமிழ்**' என்ற தலைப்பில் திரு.பழ.பாசுகரன் ஆகியோர் பங்கேற்று கருத்துரை வழங்க உள்ளனர்.

அன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறும் நிறைவு விழாவில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் வரவேற்புரையாற்றவும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு.இரா.வெங்கடேசன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்கவும், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் விழாப் பேருரையாற்றவும், திரு.நாகைமுகுந்தன் அவர்கள் கருத்துரையாற்றவும், மேதகு மொரிசியசு துணைக் குடியரசுத் தலைவர் திரு.பரமசிவம்பிள்ளை வையாபுரி அவர்கள் உட்பட முனைவர் க.பாசுகரன், பேராசிரியர் முனைவர் உலகநாயகி பழனி, முனைவர் ஒப்பிலா மதிவாணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கவும் உள்ளனர். நிகழ்ச்சியின் முடிவில் தமிழ் வளர்ச்சி நிருவாகத் துணை இயக்குநர் திரு.ம.சி. தியாகராசன் அவர்கள் நன்றியுரையாற்ற உள்ளார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**